**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, அரக்கோணம்**

**முன்னிலை**: திரு.மு.கோகுல் மிதுன் குமார், எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),
அரக்கோணம்.

2026ம் ஆண்டு ஜூலை 07ம் நாள் செவ்வாய்கிழமை

**C.C.No.71/2024**
**(CNR.No.TNRP09-004088-2024)**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அரக்கோணம் நகர காவல் நிலையம்,
குற்ற எண். 208/2018. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. சரவணன், வயது–41,
த/பெ. ஆறுமுகம்,
நெ. 180, காவாகரைத் தெரு,
அரிகில்பாடி,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. முரளி @ ராஜ்குமார், வயது–57,
த/பெ. கிருஷ்டப்பன்,
நெ. 20/15, நேருஜீ நகர் 5வது தெரு,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம். ... எதிரிகள்

இவ்வழக்கு 28.10.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 07.07.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில்

எதிரிகள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

07.08.2018ம் தேதியன்று காலை 08.30 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வெங்கடேசபுரம் ஜங்சனில், காவல் ஆய்வளார் கோகுல்ராஜன் மற்றும் உடன் பணிபுரியும் காவலர்களுடன் கண்காணித்துக் கொண்டிருந்தபோது, எதிரிகள் TN–25 F–5477 என்ற பதிவெண் கொண்ட லாரியில் சுமார் 3 யூனிட் ஆற்றமணலை அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக நீர் நிலைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் திருடி ஏற்றியதாக, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 430, 379ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1வது மற்றும் 2வது எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிகளுக்கு BNSS பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 430, 379ன் கீழ் முதல் நோக்கு தோன்றியதால் BNSS பிரிவு 263–ன் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர்.

எதிரிகள் குற்றத்தினை மறுத்தமையால் BNSS பிரிவு 265-ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு</u>**:-

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி-1 முதல் பட்டியல் சாட்சி-3 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு, பட்டியல் சாட்சி-1 முதல் பட்டியல் சாட்சி-3 வரையிலான சாட்சிகள் விசாரிக்காமல் விட்டொழிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக முதல் நிலை காவலர் அசோக்குமார் பட்டியல் சாட்சி-4 ஆகவும், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் தட்சணாமூர்த்தி பட்டியல் சாட்சி-5 ஆகவும் சேர்க்கப்பட்டு, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

(i) 07.08.2018ம் தேதியன்று காலை 08.30 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வெங்கடேசபுரம் ஜங்சனில், காவல் ஆய்வளார் பட்டியல் சாட்சி-3 கோகுல்ராஜன் என்பவர் உடன் பணிபுரியும் காவலர்களான தலைமை காவலர் பட்டியல் சாட்சி-1 கதிர்வேல், முதல் நிலை காவலர் பட்டியல் சாட்சி-2 பிரேம்குமார் ஆகியோருடன் மணல் கடத்தல் மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அரக்கோணம் நோக்கி

வந்த TN–25 F–5477 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை நிறுத்த முயன்றார். பிறகு டிப்பர் லாரியின் ஓட்டுநர் வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார். மேலும் அந்த வாகனத்தை சோதனை செய்ததில் 3 யூனிட் ஆற்றுமணல் இருந்தது.

(ii) பிறகு காவல் ஆய்வளார் பட்டியல் சாட்சி–3 கோகுல்ராஜ், அன்றைய தினமே காலை 8.45 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் பணியில் இருந்த தலைமை காவலர் பட்டியல் சாட்சி–1 கதிர்வேல் மற்றும் முதல் நிலை காவலர் பட்டியல் சாட்சி–2 பிரேம்குமார் ஆகியோர் முன்னிலையில் மகஜர் தயார் செய்து, வழக்கு சொத்துக்களான TN–25 F–5477 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி மற்றும் 3 யூனிட் மணலை அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். பிறகு வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.208/2018 இதச பிரிவு 430, 379ன் கீழ் எதிரிகள் மீது அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

(iii) பிறகு வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் பட்டியல் சாட்சி–3 கோகுல்ராஜன், பின்னர் பட்டியல் சாட்சி 1 மற்றும் பட்டியல் சாட்சி 2யை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம்–91 மூலம்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற முன் பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் இல்லை.

(iv) பிறகு விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால், பட்டியல் சாட்சி–3 காவல் ஆய்வாளர் கோகுல்ராஜன் விசாரணையை முடித்து, எதிரிகள் மீது நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் BNSS பிரிவு 351(1)(b) கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்</u>**:–

1வது மற்றும் 2வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 430, 379ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?

8. இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. சாட்சியங்களும், சான்றாவணங்களும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. அரசுதரப்பில், முதல் நிலை காவலர் அசோக்குமார் அ.சா.1 ஆகவும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தட்சணாமூர்த்தி அ.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, கைப்பற்றுதல் மகஜரில் உள்ள பட்டியல் சாட்சி–1

கதிர்வேலுவின் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், வழக்கு சொத்தின் புகைப்படம் (5 எண்ணிக்கை) அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், படிவம்–91 அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட முதல் நிலை காவலர் அ.சா.1 அசோக்குமார் தனது சாட்சியத்தில், நான் தற்போது அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன் என்றும், 2018ம் ஆண்டு அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றிய கதிர்வேல் என்பவரது கையொப்பம் நன்கு தெரியும் என்றும், அதன் பேரிலும், ஆவணங்களின் பேரிலும் நான் சாட்சியம் அளிப்பதாகவும், பின்னர் கடந்த 07.08.2018ம் தேதி காலை 8.30 மணிக்கு ஆய்வாளர் பட்டியல் சாட்சி–3 கோகுல்ராஜ், தலைமை காவலர் பட்டியல் சாட்சி–1 கதிர்வேல், பட்டியல் சாட்சி–2 பிரேம்குமார் ஆகியோருடன் மணல் கடத்தல் மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக அரக்கோணம் நகர காவல் நிலையக்கு உட்பட்ட வெங்கடாபுரம் சந்திப்பில் கண்காணிப்பில் இருந்தது குறித்தும், பிறகு அரக்கோணம் நோக்கி வந்த TN–25–F–5477 பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை நிறுத்த முயன்றது குறித்தும், பிறகு அதன் ஓட்டுநர் வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார் என்றும், மேலும்

அந்த வாகனத்தை சோதனை செய்ததில் 3 யூனிட் ஆற்றுமணல் இருந்தது குறித்தும், பிறகு அன்றைய தினமே காலை 8.45 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் இருந்த போலீஸ் சாட்சிகளின் முன்னிலையில் TN-25-F-5477 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி மற்றும் 3 யூனிட் மணலை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியது குறித்தும், பிறகு வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் பட்டியல் சாட்சி 1 தலைமை காவலர் கதிர்வேலுவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 தட்சணாமூர்த்தி தனது சாட்சியத்தில், நான் தற்போது அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், 2018ம் ஆண்டு அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய கோகுல்ராஜ் என்பவரது கையொப்பம் நன்கு தெரியும் என்றும், அதன் பேரிலும், ஆவணங்களின் பேரிலும் நான் சாட்சியம் அளிப்பதாகவும், பிறகு 07.08.2018ம் தேதி காலை 8.30 மணிக்கு ஆய்வாளர் பட்டியல் சாட்சி-3 கோகுல்ராஜ், தலைமை காவலர் பட்டியல் சாட்சி-1 கதிர்வேல், பட்டியல் சாட்சி-2 பிரேம்குமார் ஆகியோருடன் மணல் கடத்தல் மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக அரக்கோணம் நகர காவல் நிலையக்கு உட்பட்ட வெங்கடாபுரம் சந்திப்பில் கண்காணிப்பில் இருந்தது குறித்தும், அப்போது அரக்கோணம் நோக்கி வந்த TN-25-F-5477 பதிவெண் கொண்ட டிப்பர்

லாரியை நிறுத்த முயன்றது குறித்தும், பிறகு அதன் ஓட்டுநர் வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார் என்றும், மேலும் அந்த வாகனத்தை சோதனை செய்ததில் 3 யூனிட் ஆற்றுமணல் இருந்தது குறித்தும், பிறகு அன்றைய தினமே காலை 8.45 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் இருந்த போலீஸ் சாட்சிகளின் முன்னிலையில் TN–25–F–5477 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி மற்றும் 3 யூனிட் மணலை அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளது குறித்தும், பிறகு வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.208/2018 இதச பிரிவு 430, 379ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது குறித்தும், பின்னர் பட்டியல் சாட்சி 1 மற்றும் பட்டியல் சாட்சி 2யை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், பிறகு அ.சா.ஆ.5 படிவம்–91யை வழக்கு சொத்துடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும், பின்னர் விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் ஆய்வாளர் பட்டியல் சாட்சி–3 கோகுல்ராஜ் விசாரணையை முடித்து மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 379, 430 ஐ பரிசீலனை செய்கையில்

இ.த.ச. பிரிவு 379 :– *"Whoever, intending to take dishonestly any movable property out of the possession of any person without that person's consent, moves that property in order to such taking is said to commit theft"*

மேற்படி சட்டப் பிரிவின் படி, ஓர் எதிரிகள் மற்றவரின் சொத்தைத் தனக்கு ஆதாயம் கிடைக்கும் வகையிலும், மற்றவர்க்கு நஷ்டம் ஏற்படும் வகையிலும் குற்ற எண்ணத்துடன் திருடியிருக்க வேண்டும். எதிரிகள் ஆற்று மணலை திருடி குற்றம் விளைவித்ததாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இ.த.ச.பிரிவு 430–*" Whoever commits mischief by doing any act which causes, or which he knows to be likely to cause, a diminution of the supply of water for agricultural purposes, or for food or drink for human beings or for animals which are property, or for cleanliness or for carrying on any manufacture, shall be punished with imprisonment of either description for a term which may extend to five years, or with fine, or with both."*

மேற்படி சட்டப் பிரிவின் படி எதிரிகள் ஆற்று மணலை திருடியதன் காரணமாக நீர் நிலைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் குற்றம் விளைவித்ததாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியங்களில் அரசுதரப்பு வழக்கிற்கு ஒத்துரைத்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள். சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 தட்சணாமூர்த்தி தனது சாட்சியத்தில் பட்டியல் சாட்சி–3 காவல் ஆய்வாளர் கோகுல்ராஜன் என்பவர் எதிரிகள் மீது

வழக்கு பதிவு செய்தது பற்றியும், எதிரிகள் குற்றம் புரிந்தது பற்றியும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும் மற்றும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை முரண்படுத்தும் வகையில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை அமையப் பெறவில்லை. மேலும், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் தெளிவாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. மேலும், அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரிகள் ஆற்று மணலை குற்ற நோக்குடன் திருடியதாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், எதிரிகள் தான் மணல் கடத்தி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும், எதிரிகள் ஆற்று மணலை திருடி நீர்நிலைக்கு குந்தகம் விளைவித்ததாக அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிகளுக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 430, 379ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 430, 379ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிகள் BNSS பிரிவு 271(2)ன் கீழ் குற்றவாளிகள் என இந்த நீதிமன்றம் தீர்மானித்து, குற்றத்திற்கு அளிக்கப்படும் தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவிய போது கீழ்கண்டவாறு தெரிவித்தார்கள்."

1வது எதிரி சரவணன், வயது–41, த/பெ. ஆறுமுகம்:–

**கேள்வி:** உம்மை இந்த நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 430, 379 ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்கிறது. நீர் என்ன சொல்கிறீர்?

**பதில்:** நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். என் குடும்பத்தினர் என்னை நம்பிதான் உள்ளார்கள். எனக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2வது எதிரி முரளி @ ராஜ்குமார், வயது–57, த/பெ. கிருஷ்டப்பன்:–

**கேள்வி:** உம்மை இந்த நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 430, 379 ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்கிறது. நீர் என்ன சொல்கிறீர்?

**பதில்:** நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். என் குடும்பத்தினர் என்னை நம்பிதான் உள்ளார்கள். எனக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கின் பொருண்மைகளையும், குற்றத்தின் தன்மையையும் கருத்தில் கொண்டும், எதிரிகளுக்கு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958ன் கீழ் பலன் கிடைக்கக் கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எதிரிகள் தண்டனை குறித்து அளித்த பதிலையும், எதிரிகள் மீது வேறு முன் வழக்குகள் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டும், இந்த வழக்கின் பொருண்மைகளை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மையை கருதி எதிரிகளுக்கு அபராதம் மட்டும் விதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

அதன்படி, 1வது, 2வது எதிரிகள் மீதான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 430ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.3,000/− அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.6,000/−. அபராதத் தொகையை கட்ட தவறினால், எதிரிகளுக்கு ஒரு வாரம் காலம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

1வது, 2வது எதிரிகள் மீதான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.2,000/− அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.4,000/−. அந்த அபராதத் தொகையை கட்ட தவறினால், எதிரிகளுக்கு ஒரு வாரம் காலம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

மேற்கண்ட தண்டனைகள் ஏககாலத்தில் அனுபவிக்கப்பட வேண்டும் என்று BNSS பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.10,000/-. எதிரிகள் இந்த வழக்கில் நீதிமன்ற காவலில் இல்லை என்பதால், எதிரிகளுக்கு BNSS பிரிவு 468ன் கீழான பலன் கிடைக்கக்கூடியது அல்ல என்று உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணையம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் அரசு தரப்பில் சி.பி.எண்-140/2018ல் கண்ட வழக்கு சொத்தான TN-25 F-5477 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை, மனுதாரர் சுரேஷ் த/பெ. மதியழகன் என்பவர் Crl.M.P.No.1597/2018, 17.05.2018 தேதியிட்ட உத்தரவின் மூலம் இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும், வழக்கு சொத்தைப் பொறுத்து அவர் எழுதிக்கொடுத்துள்ள பிணையம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும், சி.பி.எண்-140/2018ல் கண்ட மற்றொரு வழக்கு சொத்தான 3 யூனிட் ஆற்றுமணலை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு அரசுடைமையாக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு,

என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜூலை 07ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M GOKUL MITHUN KUMAR

Judicial Magistrate No.I (FAC), Arakkonam.
Digitally signed by M GOKUL MITHUN KUMAR
DN: cn=M GOKUL MITHUN KUMAR, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),
அரக்கோணம்.

__இணைப்பு__:

1. __அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்__:

| | |
|---|---|
| அ.சா.1 | அசோக்குமார் (முதல் நிலை காவலர்). |
| அ.சா.2 | தட்சணாமூர்த்தி (சிறப்பு உதவி ஆய்வாளர்). |

2. __அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்__:

| **Exhibits** | **Date** | **Description of Documents** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.04.2018 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள பட்டியல் சாட்சி–1 கதிர்வேலுவின் கையொப்பம். |
| அ.சா.ஆ.2 | 07.04.2018 | கைப்பற்றுதல் மகஜர். |
| அ.சா.ஆ.3 | – | வழக்கு சொத்தின் புகைப்படம் (5 எண்ணிக்கை). |
| அ.சா.ஆ.4 | 07.04.2018 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.5 | 07.04.2018 | படிவம்–91. |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**: இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:–**

இல்லை.

M GOKUL MITHUN KUMAR

Judicial Magistrate No.I (FAC), Arakkonam.
Digitally signed by M GOKUL MITHUN KUMAR
DN: cn=M GOKUL MITHUN KUMAR, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),

அரக்கோணம்.

**நகல்கள்:–**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2.

3.காவல் ஆய்வாளர், அரக்கோணம் நகர காவல் நிலையம், அரக்கோணம்.

**குறிப்பு:–**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.

2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்.